## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.

## அசல் வழக்கு எண். 6 /2021

2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 23-ம் நாள் வியாழக்கிழமை என்பவரது சாட்சியாகிய இன் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டப்பிரிவுகளின் விதிமுறைகளின்படி செல்வி. வெ. பார்கவி B.A.,B.L.,L.L.M., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 23.12.2021 | தந்தை/கணவர் பெயர்: | |
| பெயர்: | இளங்கோவன் (PW-1) | தாலுக்கா: | |
| கிராமம்: | | சமயம்: | |
| சாதி: | | வயது : | |
| தொழில்: | | | |

**முதல் விசாரணை: 23.12.2021**

நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். முதன்மை சாட்சியத்தை சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். வழக்கிற்கு ஆதரவாக கீழ்காணும் ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

19.05.1963 தேதியிட்ட எனது தந்தை சாம்பசிவத்திற்கும் எனது சித்தப்பா மகாலிங்கத்திற்கும் இடையில் ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 26.08.2019

தேதியிட்ட கணினி பட்டாவின் கணினி நகலை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.18.09.2020 தேதியிட்ட நான் எனது வழக்கறிஞா்மூலம் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞா் அறிவிப்பின் அலுவலக நகலை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி வா.சா.ஆ.3 அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டையின் அசலை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 28.09.2020 தேதியிட்ட மேற்படி வா.சா.ஆ.3 அறிவிப்புக்கு பிரதிவாதி அவரது வழக்கறிஞா்மூலம் எனது வழக்கறிஞருக்கு அனுப்பிய பதில் அறிவிப்பின் சாா்வு நகலை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவாப்படி தீா்ப்பாக வேண்டுகிறேன்.

**<u>குறுக்கு விசாரணை</u>** - இல்லை.